*வினா எண். 8 — திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரியலூரில் சார்பு நீதிமன்றங்கள் அமைப்பதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணம் யாது?

(ஆ) எப்போது அமைக்கப்பெறும்?

THE HON. THIRU K. NARAYANASWAMY: (a) and (b) — The proposals for constitution of a Sub-Court at Ariyalur and a District Munsif's Court at Jayamkondan, based on the recommendations of the Committee on Jurisdiction of Courts, will be taken up for sanction in the order of priority as soon as the required funds are allocated.

திரு. வெ. கருணாமூர்த்தி: தலைவர் அவர்களே, அரியலூரில் ஒரு சப்கோர்ட்டும், ஜெயங்கொண்ட சோழபுரத்தில் முன்சிப் கோர்ட்டும் வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுக் காலமாக இருந்து கொண்டிருக்கிறது. அந்த பிரையாரிட்டியில் எந்த இடத்தை அரியலூர் பெற்றிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Thiru K. NARAYANASWAMY: So far as the Ariyalur sub-Court is concerned, the recomendation of the High Court isthat it takes the 5th place. Four Sub-Courts have already been sanctioned. The next Sub-Court, I may give this news, will be the next item in the priority list, and therefore, there is every likelihood of the Ariyalur Sub-Court being sanctioned, subject to financial constraints at as early a time as possible.

திரு. த ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு அமைச்சர் அவர்கள் அரியலூரில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு 'சாங்ஷன்' ஆகியிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அது எவ்வளவு விரைவில் திறக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

The Hon. THIRU K. NARAYANASWAMY : As early as possible.

நீலகிரி மாவட்டத்திலுள்ள புராதன கல்வெட்டுக்கள்.

*வினா எண் 9 — திரு. க. அரங்கசாமி: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டத்தில் பல இடங்களில் பல புராதன கல்வெட்டுக்கள் இருப்பது அரசிற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

1979 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. மாவட்டந்தோறும் கல்வெட்டு ஆராய்ச்சிப் பணி தொல் பொருள் ஆய்வுத்துறையால் நடத்தப்பெற்று வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் இப்பணி மேற்கொள்ளப்படும்போது இவ்விவரங்கள் அரசுக்குத் தெரிவிக்கக்கூடும்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே பல இடங்களிலே பலபுராதனக் கல்வெட்டுக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அண்மையிலே குன்னூர் பகுதியிலே ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாக அங்கிருந்த புராதன கல்வெட்டுக்கள் சீர் கெட்டிருப்பதாக அறியப்படுகிறது. அதனைச் சீர் செய்வதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அந்தப் பணியை ஆரம்பித்து நாம் நடத்தி வருகிறோம். அதன்படி நீலகிரி மாவட்டத்தில் அந்தப் பணி துவக்கப்படும்பொழுது அதுகுறித்து ஆராயப்படும். உடனடியாகச் செய்யப்பட வேண்டிய நிலைமை இருக்குமானால் அதுகுறித்து அரசு ஆலோசிக்கும்.

செஞ்சியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலயம்.

*வினா எண் 10 — திரு. செஞ்சி இராமச்சந்திரன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செஞ்சியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கும் எண்ணம் அரசிற்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) மற்றும் (ஆ) புதிதாக ஒரு தொழிற் பயிற்சி நிலையம் செஞ்சியில் ஆரம்பிக்கும் உத்தேசம் எதுவும் அரசுக்கு தற்போது இல்லை.

திரு. செஞ்சி இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற செஞ்சிப் பகுதியில் ஒரு அரசு தொழிற் பயிற்சி நிலையம் அவசியம் என்கிற காரணத்தால் இனிமேலாவது அதை ஏற்படுத்த அரசு முன்வருமா?